5,000-க்கும் மேற்பட்ட சைக்கிள் போக்குவரத்து இருப்பதாலும், அவர்களுக்கென்று ஒரு தனி ரஸ்தா அமைக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: சைகிள் செல்வதற்கென்று தனி ரஸ்தா அமைப்பதாக இல்லை. ஆனால், அந்தச் சாலை விரிவு படுத்தப்பட்டு, அகலப்படுத்தப்படும்போது, சாலையில் வாகனங்கள் போகமுடியும் என்று கருதலாம்.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: இந்த தேசிய பெரு வழிச்சாலை, ஹைவேஸ் என்றெல்லாம் பலவற்றில், பல பகுதிகளில்தான் போடுகிறார்களே, அதில் இத்தனை அடி அகலத்திற்கு நேஷனல் ஹைவேஸ் போடவேண்டும் என்று ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா என்று அறியலாமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆங்காங்கே உற்ற வசதிக்கு ஏற்ப சாலைகள் அகலப்படுத்தப்படுகின்றன.

Valayamadevi—Neyveli Road.

*175. Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) whether its is a fact that the Valayamadevi Neyveli Highway road has been washed away to a distance of 100 feet at Muthukrishnapuram due to the recent cycline and heavy rains ; and

(b) was it repaired twice?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) ஆம். இரு தடவை 20—10—1966-லும், 12—1—1967-லும் முத்துகிருஷ்ணபுரத்தில் ¾ மைல் அருகில் நெய்வேலி—வளையமாதேவி சாலை 400 அடி நீளத்திற்கு அறுத்துக்கொண்டு போகப்பட்டது.

(இ) அறுத்துக்கொண்டு போகப்பட்ட சாலை இருதடவை அந்த இடத்திலுள்ள செங்கட்டுக்கல்லாலும் சாளைகளாலும் தற்காலிகமாக அமைக்கப்பட்டது.

திரு. கே. விநயகம்: ஐயா, பெரும்பாலும் புயலாலும், அதிகமான மழை பெய்வதாலும், இந்த இடந்தான் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது என்பதால், ' easily susceptible for repairs ' மேலும் புயல் வராது, மழை பெய்யாது என்று சொல்ல முடியாது என்பதால், அமைச்சர் குறிப்பிட்டபடி தாற்காலிக வேலையை விட்டுவிட்டு, ' பர்மனன்ட் ரிபேர் ' செய்வதற்கு ஏற்பாடு செய்ய முடியாதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி அறுத்துக் கொண்டு போகாமல், அன்றி முழுவதும் போக்குவரத்துக்குப் பயன்படும் அளவில் பாலம் அமைக்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது; இரண்டு லட்சம் செலவில் மதிப்பீடும் தரப்பட்டுள்ளது.

1967 ஜூலை 5]

திரு. சி. கோவிந்தராஜன்: இந்த நெய்வேலி–வளையமாதேவி சாலை சிதம்பரத்திற்கும், கும்பகோணத்திற்கும் தொடர்பு ஏற்படுத்திக் கொடுக்கிறது. நெய்வேலியிலிருந்து ட்ராபிக் அதிகமாக இருப்பதால், அந்த ரோடு மோசமாக இருப்பதால், அதை தார் ரோடாக மாற்ற ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பாலம் கட்டுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து உறுப்பினர்களுடைய யோசனையும் பரிசிலிக்கப்படலாம்.

எர்ஸ்கின் மருத்துவ மனை, மதுரை

* 171 வின.—திரு. என். சங்கரய்யா : திரு. கரு. சிமைச்சாமி : } மதிப்பிற்குரிய பொதுச் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையிலும், மருத்துவக் கல்லூரியின் மாணவர் விடுதியிலும் கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், இக்குறை நீங்க மேற்படி இரண்டு இடங்களிலும் பெரும் கிணறுகளை வெட்டி குழாய் மூலம் தண்ணீர் வழங்குவதற்கு அவசர நடவடிக்கை ஏதேனும் பரிசிலனையிலுள்ளதா ?

(உ) தற்காலிகமாக தண்ணீர்த் தட்டுப்பாட்டை குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) & (உ) மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் ஒன்றும், மதுரை மருத்துவக் கல்லூரியில் ஒன்றும் ஆக இரு ஆழமான துளைக் கிணறுகள் அமைப்பதற்கு வேண்டிய ஒப்பளிப்பு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. இந்த வேலையை நிறைவேற்றும் பொறுப்பு கட்டடத் தலைமைப் பொறியாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியிலும், மருத்துவக் கல்லூரியிலும் தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருப்பதால், அங்கே ஒரு அவசர நிலை இருப்பதால், அமைச்சர் கூறிய ஏற்பாடுகள் எப்பொழுது நடைமுறைக்கு வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த ஆண்டிலேயே இந்த வேலை துவக்கப்பட்டு முடிவுறும் என்று அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.